# தமிழ் - இடைநிலைக் கல்வி (237)

## (அக மதிப்பீடு) **Tutor Marked Assignment (2026-27)**

மொத்த மதிப்பெண்: 20

குறிப்பு:

(1) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களின் அருகிலும் அதற்கான மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) விடைத்தாளின் முதல் பக்கத்தில் பெயர், பதிவு எண், தாளின் பெயர் போன்றவற்றை எழுதுதல் வேண்டும்.

---

1. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) இறைவன் கனவில் தோன்றிக் குறிப்பிட்ட இடத்தில் வீரசேணன் எவற்றைக் கண்டான்? காளையின் பாதச் சுவடுகள்

   (ஆ) சுயஉதவிக்குழுவின் நோக்கம் குறித்து கூறுக.

2. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) வேலை வேண்டி விண்ணப்ப கடிதம் ஒன்று எழுதுக.

   (ஆ) விடுமுறை கேட்டு விண்ணப்ப கடிதம் ஒன்று எழுதுக.

3. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) செண்பகாதேவி அருவி குறித்து எழுதுக.

   (ஆ) தூண்பாறைகள் குறித்து எழுதுக.

4. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4

   (அ) இந்தியாவில் பேரிடர்கள் நிகழ்வுகள் குறித்து எழுதுக.

   (ஆ) கீழே உள்ள பகுதியினைச் சுருக்கி வரைக.

   தொல்காப்பியம் மக்கள் வாழ்க்கையினை அகம், புறம், என இருவகையாகப் பகுத்து விளக்குகின்றது. ஒத்த அன்புடைய கணவனும் மனைவியும் கலந்து வாழும் வாழ்வு அகவாழ்வாகும். இங்ஙனம் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் ஒன்றி வாழ்வதற்குரிய அரசியல் வாழ்வு புறவாழ்வாகும்.

அகவாழ்வு களவு, கற்பு என இருவகைப்படும். யாருக்கும் தெரியாத நிலையில் ஒருவரை ஒருவர் சந்தித்து வாழும் நிலை களவு எனப்படும். கற்பு என்பது இருவரது பெற்றோரும் உடன்பட்டுத் திருமணம் முடிக்கும் நிலை கற்பு எனப்படும்.

புறவாழ்வு ஐவகை நிலங்களின் பாற்பட்டது. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது. காடும் பசும் புல்வெளிகளும் சேர்ந்த இடம் முல்லை எனப்பட்டது. குறிஞ்சியின் ஒரு பகுதியும் முல்லையின் ஒரு பகுதியும் சூரியனின் வெப்பத்தால் பாலை நிலம் தோன்றும். கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் ஆயிற்று. மக்கள், மரங்கள், விலங்குகள், பறவைகள், நீர்நிலைகள், ஊர்கள், இசைக்கருவிகள், மக்களுடைய தொழில்கள் முதலியவற்றைத் தனித்தனியே எடுத்துக் கூறியுள்ளனர். விலங்குகள், பறவைகள், பொழுது முதலியன மக்கள் வாழ்வில் எங்ஙனம் பயன்பட்டன என்பதையும் விளக்கியுள்ளனர்.

5. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4
(அ) முல்லையின் சிறப்பு குறித்து எழுதுக.
(ஆ) சேமிப்பு கணக்குச் செலுத்தும் சீட்டை நிறைவு செய்யும் முறைகளை விவரி.

6. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 500 சொற்களுக்கு மேல் விடையளிக்க. 6
(அ) மராட்டியர் ஆட்சி குறித்து எழுதுக.
(ஆ) பின்வரும் விமானப் பயணம் என்னும் துணுக்கினை உரையாடல் வடிவில் எழுதுக.

விமானப் பயணம்

ஒரு விமானத்தில் இந்தியாவிலிருந்து வேறொரு நாட்டிற்குச் சமாதானப்பயணமாக அரசியல்வாதி, மருத்துவர், விஞ்ஞானி, பள்ளி மாணவன் ஆகிய நால்வரும் சென்று கொண்டிருந்தனர், அப்பொழுது நடுவானில் விமானத்தில் கோளாறு ஏற்பட்டது, விமானி இந்த மூன்று பாரசூட்டுகள் உள்ளன அதன் மூலம் கீழே குதித்து விடுங்கள் என்றார். உடனே மருத்துவர் நான் உயிர்களைக் காக்கக் கடமைப் பட்டவன்

எனக்கூறியவாறே பாராசூட்டிலிருந்து குதித்தார், விஞ்ஞானி எதிர்காலத்தில் என்னுடைய சேவை நாட்டுக்குத் தேவை எனக் கூறியவாறே மற்றொரு பாராசூட்டிலிருந்து கீழே குதித்தார். அரசியல்வாதியும் அவசர அவசரமாகக் குதித்தார். ஆனால் ஒரு பாராசூட் மீதமிருந்தது. விமானியோ வியப்புடன் மூன்று பாராசூட்டுகள்தானே இருந்தன. மூன்று பேர் குதித்து விட்டனர். ஆனாலும் ஒன்று மீதம் உள்ளதே என்றார். அதற்குப் பள்ளிச் சிறுவன் மூன்றாவதாக ஓர் அரசியல்வாதி மாமா மாட்டிக்கொண்டு குதித்தாரே அது பாரசூட் இல்லை என்னுடைய புத்தகப்பை என்றான்.

----------------